DEPOSITION OF WITNESS
(Chapter XXIII Code of Criminal Procedure)
IN THE COURT OF JUDICIAL MAGISTRATE, THIRUVADANAI

| | | |
|---|---|---|
| Calendar | ... | |
| Miscellaneous | ... | |
| Preliminary Register | ... | Case No: C.C. No.13 /2018 |
| Session | ... | |
| | | Prosecution / PW-1 |
| Deposition of Witness for | ... | Defence / Court |

---

| | | |
|---|---|---|
| Name | : | திருமதி.செல்லம்மாள் |
| Father's Name (or) | | |
| Husband Name | : | க/பெ.சாக்ரடீஸ் |
| Village | : | |
| Taluk | : | |
| Caste | : | |
| Calling | : | |
| Religion | : | |
| Age | : | |

(A1 present.A2 to A6 absent. u/s 355 BNSS petition filed and allowed)
Solemnly affirmed in accordance with provisions of Act X of 1873 the day of 07.03.2026

---

**<u>மனுவின் பெயரில் மனு அனுமதிக்கப்பட்டு மீண்டும் குறுக்கு விசாரணை</u>**

1.நான் 5ம் வகுப்பு வரை படித்துள்ளேன். எனக்கு எழுத படிக்க தெரியும். ஆஜர் எதிரி எனது அமமாவின் உடன்பிறந்த தம்பி மகன் என்றால் சரிதான். ஆஜர் எதிரி MCA வரை படித்துள்ளார். எனக்கும் ஆஜர் எதிரிக்கும் சொந்தம் விட்டுபோயி விடக்கூடாது என்று திருமணம் பேசி முடித்து வைத்தார்கள் என்றால் சரிதான்.ஆனால் நாங்கள் பணமும் கொடுத்தோம். எனது தாயார் பெயர் அழகம்மாள். எனது தாயாருடன்

பிறந்தவர்கள் 4 ஆண்கள் என்றால் சரிதான். அதில் ஆஜர் எதிரியின் தகப்பனார் போஸ் மற்றும் இவ்வழக்கில் எனது தரப்பு சாட்சிகளாக உள்ள தமிழ்செல்வன், ஈஸ்வரன் மற்றும் இறந்துபோன வெங்கடேசன் ஆவார்கள் என்றால் சரிதான். எனது தாயாருடன் பிறந்தவர் எனது சின்னம்மா சுயராட்சியம் என்னும் நபர் உள்ளார் என்றால் சரிதான். எங்கள் சமூக வழக்கப்படி எனது தாயாரரின் மூதாதையார் சொத்துகள் எனது தாயார் பெயரிலும் எனது சின்னம்மா சுயராட்சியம் பெயரிலும் தான் உள்ளது என்றால் சரிதான்.எனது தாயாருடன் பிறந்த ஆண் சகோதரர்கள் பெயரில் எனது தாயாரின் மூதாதையர் சொத்துகள் உள்ளதா என்றால் இல்லை.

2. எனது அம்மா பெயரில் மொத்தம் எவ்வளவு சொத்துகள் உள்ளது என்றால் 5 ஏக்கர் சொத்து உள்ளது. மேற்படி எனது அம்மா பெயரில உள்ள சொத்துகள் அவரது இறப்பிற்கு பின்பு அவரது மகளான எனக்கு தான் வந்துசேரும் என்றால் வராது. எனது அம்மா பெயரில் உள்ள சொத்துகளின் சர்வே எண்கள் எனக்கு தெரியும் என்றால் மனப்படமாக தெரியாது. மேற்படி சொத்துகளின் காப்பீடு தொகை எனது வங்கி கணக்கில் தான் வரவு வைக்கப்பட்டுள்ளது என்றால் சரிதான். அது எஸ்பிஐ காரைக்குடி கிளையில் உள்ள எனது வங்கி கணக்கில் வரவு வைக்கப்படும். நான் தற்போது குடியிருக்கும் வீடானது எனது பாட்டி அழகம்மாள் பெயரில் உள்ளது. மேற்படி வீடானது எனது தாயாரின் காலத்திற்கு பிறகு எனக்கு தான் வந்துசேரும் என்றால் சரியல்ல. எனது பாட்டிக்கு 2 மகள்கள் உள்ளார்கள். அவர்களுக்கும் வாரிசுகள் உள்ளார்கள். எனது தாயார் பெயரிலும் சுயராட்சியம் பெயரில் உள்ள சொத்துகளை எதாவது விற்பனை செய்துள்ளோமா என்றால் இல்லை சுயராட்சியம் மகனுக்கு பணத்தேவை இருந்ததால் ஒரு சொத்தை அடமானம் வைத்துள்ளோம். மேற்படி அடமான பாத்திரத்தில் எனது தாயாரும் கையொப்பம் இட்டுள்ளார்என்றால் சரிதான்.

3.மேற்படி அடமான பத்திரத்தில் நானும் எனது தரப்பு சாட்சியான தமிழ்செல்வன் என்பவரும் சாடசி கையொப்பம் இட்டுள்ளோம் என்றால் சரிதான். மேற்படி சொத்தை GPS மூலம் நான் தான் படம் எடுத்தேன் என்றால் சரிதான். மேற்படி சொத்தை GPS மூலம் அதன் உரிமையாளர் தான் படம் எடுக்க வேண்டும் என்றால் அந்த சொத்தை நான் தான் அனுபவம்செய்து வருகிறேன் அதானல் படம் எடுத்தேன். மேற்படி

சொத்தை அடமானம் வைத்து வாங்கிய நபர் எனது வங்கி கணக்கில் ரூ2,00,000/– அனுப்பினார் என்றால் சரிதான். என்னுடைய ஆதார் அட்டையும் தமிழ்செல்வன் ஆதார் அட்டையும் அடமான ஆவணத்தில் போடப்பட்டுள்ளது என்றால் சரிதான். மேற்படி எங்கள் இருவரின் ஆதார் அட்டைகளிலும் ஒரே விலாசம்தான் குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். அவரது அம்மா வீடு அங்கு உள்ளது. மேற்கண்ட ஆவணத்தில் ரூ. 7,00,000 த்திற்கு கிரையம் பெற்றதாக போடப்பட்டுள்ளது என்றால் சரிதான். ஆஜர் எதிரிமீது மொத்தம் 3 வழக்குகள் போடப்பட்டுள்ளது என்றால் சரிதான். ஆஜர் எதிரியின் வாகனத்தை தாக்கியதாக என்மீதும் தமிழ்செல்வன் உட்பட பிறர் மீதும் வழக்கு நிலுவையில் உள்ளது என்றால் சரிதான்.

4.எங்கள் சமுதாய வழக்கப்படி பெண் வீட்டிற்கு கணவர் வந்து வாழ்வார் என்றால் சரியல்ல. வெளியங்கோட்டையில் உள்ள வீடு தான் எனது பூர்விக வீடு என்றால் சரிதான். மேற்படி வீட்டில் நானும் ஆஜர் எதிரியும் சேர்ந்து வாழ்ந்தோமா என்றால் 2005 ஆண்டு வரை அங்கு சேர்ந்து வாழ்ந்தோம். பெண்வழியில் என்பெயரில் சொத்துகள் மாறி வரும் என்பதால் வரதட்சணை என்னும் கேள்விக்கே இடம்இல்லை என்றால் சரியல்ல.எதிரிகள் கூடுதல் வரதட்சணை கேட்டதாக வழக்கில் குறிப்பிட்டுள்ளேன். எப்போது கேட்டார்கள் என்றால் திருமணம் ஆன உடனே கேட்டார்கள். மேற்படி வரதட்சணை கேட்டதற்கு காவல் நிலையத்தில் புகார் அளித்துள்ளேனா என்றால் இல்லை. மேற்படி எதிரிகள் வெளியங்கோட்டையில் நானும் ஆஜர் எதிரியும் சேர்ந்து வாழ்ந்த காலத்தில் தான் என்னிடம் கூடுதல் வரதட்சணை கேட்டார்கள் என்றால் சரிதான்.எனக்கும் ஆஜர் எதிரிக்கும் இந்து மத முறைபடி திருமணம நடைபெற்றது என்றால் சரிதான்.

5. எங்களது திருமணத்தை நிரூபிக்கும் வகையில் ஆவணங்கள் இவ்வழக்கில் தாக்கல் செய்யப்படவில்லை என்றால் திருமணம் புகைப்படம், திருமண அழைப்பிதழ் ஆகியவற்றை தாக்கல் செய்தேன் எந்த வழக்கில் என்று தெரியாது. எனக்கு 2013 ஆண்டு இறுதியில் புற்றுநோய் ஏற்பட்டது. 2016 ஆண்டு எனக்கு புற்றுநோய் ஏற்படவில்லை என்றால் சரிதான். வழக்கில் 2016 ஆண்டு புற்றுநோய் ஏற்பட்டதாக தெரிவித்துள்ளேன் என்றால் அந்தவிவரம் எனக்கு தெரியாது.புற்றுநோய்க்கு சிகிச்சை

பெற்றகாலத்தில ஆஜர் எதிரி என்னுடன் தான் இருந்தார் என்றால் புற்று நோய்க்கு அறுவை சிகிச்சை செய்தபோது என்னுடன்இருந்தார். சிகிச்சையின் போது எனக்கு மொட்டை போட்டியிருந்ததால் மனசோய்வு வந்து விட கூடாது என்று ஆஜர் எதிரி மற்றும் எனது பிள்ளைகளும் மொட்டை போட்டு கொண்டார்கள் என்றால் சரிதான். எதற்காக போட்டார்கள் என்று தெரியாது. சிகிச்சைக்கான தொகையை எனது பெற்றோர்கள் செலுத்தியதற்கான ஆவணத்தை வழக்கில் தாக்கல்செய்யவில்லை என்றால் சரிதான். மதுரை மீனாட்சி மருத்துவமனையில் எனக்கு மருத்துவ சிகிச்சைக்கான ரூபாய் 4,50,000 த்தை ஆஜர் எதிரி தான் செலுத்தி அவர்பெயரில் ரசீது வழங்கப்பட்டுள்ளது என்றால் அறுவை சிகிச்சை சமயத்தில அவர் உடன் இருந்தார் அதானல் அவரது பெயரில் கட்டண ரசீது போடப்பட்டுள்ளது. ஆஜர் எதிரிதான் மேறப்டி தொகையை செலுத்தினார் என்றும் அதனால் தான் ரசீது அவர் பெயரில் ஏற்பட்டுள்ளது என்றும் நான் பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

6. நான் மருத்துவமனையிலிருந்து 02.04.2014 தேதி வெளியேறியபோது எனது Ovarian யில் இருந்த Tumour யை நீக்கிவிட்டார்கள் என்றும் அதிலிருந்து எனக்கு எந்த வித புற்றுநோயும் ஏற்பட வாய்ப்பில்லை என்றால் சரியல்ல. இன்றுவரை சிகிச்சை பெற்று வருகிறேன். நான் தற்போது வரை சிகிச்சை பெறும் ஆவணங்களை வழக்கில் தாக்கல்செய்யவில்லை என்றால் சரிதான் நான் ஹோமியோபதி சிகிச்சை பெற்றுவருகிறேன். மேறப்டி சிகிச்சையை லெட்சுமி கிளினிக் மருத்துவர் மோகனிடம் பெற்று வருகிறேன். மேற்படி மருத்துவர் மோகனிடம் சிசிக்சை பெற்று வருவதற்கான ஆவணத்தை வழக்கில் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். மேற்படி மருத்துவரை விசாரித்தால் சிகிச்சை குறித்த உண்மை தெரியவரும் என்றால் சரிதான்.

7. 2014 ஆண்டிறகு பிறகு எனக்கு எந்த வித புற்றுநோய் பாதிப்பும் ஏற்படவில்லை என்றும் நான் வழக்கிற்காக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. 2015 ஆண்டு வரை ஆஜர் எதிரியின் வங்கி கணக்கிலிருந்து எனது வங்கி கணக்கிற்கு பணம் அனுப்பியுள்ளார் அதன்பின் அனுப்பவில்லை. 08.12.2016 தேதி எனக்கு ஆஜர்எதிரியின் காரை விற்பனை செய்து விற்பனை தொகையான ரூ3,40,000 த்தை பாண்டி என்பவர் எனது வங்கி கணக்கில் காசோலை மூலம் பணம் செலுத்தினார்

என்றால் சரிதான். அது என்னுடைய கார் ஆகும். அந்த காரானது ,Swift Dzire காராகும் அது 2015 ஆணடு வாங்கப்பட்டது. சம்பவ காலத்தில் ஆஜர் எதிரி ரூ 20,000 மற்றும் ரூ,2,10,564 தொகையை எனது வங்கி கணக்கில் 29.07.2017 தேதியில் மற்றும் 23.11.2016 ம் தேதி ரூ.70,000 FD செலுததினார் என்றால் சரியல்ல. மேற்படி விவரத்தை வங்கி ஊழியர்களை அழைத்து விசாரித்தால் உண்மை தெரியவரும் என்றால் சரிதான். ஆஜர் எதிரி இந்த வழக்கு தாக்கல் செய்வதற்கு முன்பு வரை பல வகையில் எனக்கு தொகை கொடுத்து பராமரித்து வந்தார் என்றால் சரிதான்.

8. எனக்கும் எனது இரண்டு ஆண் பிளளைகளுக்கும் வழக்கு தாக்கல் செய்வதற்கு முன்பு LIC காப்பீடு Premium தொகையை ஆஜர் எதிரி முழுமையாக செலுத்தி வந்தார் என்றால் அந்த விவரம் எனக்கு தெரியாது. ஆஜர் எதிரி படித்தவர் என்பதால் நான் படிக்காத நபர் என்பதால் நான் தாழ்வு மனப்பான்மை கொண்டு ஆஜர் எதிரியுடன் நல்ல மனைவியாக வாழவில்லை என்றால் சரியல்ல. ஆஜர் எதிரி 03.09.2017 ஆண்டு இரண்டாம் திருமணம் செய்துகொண்டார் என்று வழக்கில் சொல்லியுள்ளேன் என்றால் சரிதான். DVC 1/2018 ல் ஆஜர்எதிரி 03.10.2017 ஆண்டு இரண்டாம் திருமணம் செய்து கொண்டதாக தெரிவித்துள்ளேன் என்றால் சரிதான். அதன்பின் 2022 ஆண்டு இடைக்கால ஜீவனாம்சம் கேட்டு இந்நீதிமன்றத்தில் மனு தாக்கல்செய்தேன் என்றால் சரிதான். மேற்படி மனுவிலும் 03.10.2017 ஆண்டு ஆஜர் எதிரிக்கு 2 ம் திருமணம் நடைபெற்றதாக தெரிவித்துள்ளேன் என்றால் சரிதான்.

9. எனதுமுதல் விசாரணையில் எனக்கு எந்த வித சொத்தும் வருமானமும இல்லமல் ஏழ்மை நிலையில் உள்ளதாக தெரிவித்துள்ளேன் என்றால் சரிதான். DVC வழக்கில் எனது சொத்துவிவரத்தில் எனக்கு உள்ள சொத்துகள் குறித்த விவரத்தை நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரிதான். முதல் விசாரணையில் நான் சொத்து இல்லை என்று பொய்யாக சாட்சியம் அளித்துள்ளேன் என்றால் சரியல்ல. ஆஜர்எதிரியுடன் ஏற்பட்ட திருமணத்தின்போது வீடியோ எடுக்கப்படவில்லை என்றும் புகைப்படம் மட்டும் தான் எடுக்கப்பட்டது என்றால் சரிதான்., நான் இருசக்கர வாகனம் வைத்துள்ளேன் என்றும் அதை ஓட்டுவதற்கு என்னிடம் உரிமம் உள்ளது என்றால் சரிதான். ஆஜர் எதிரிக்கு 2 ம் திருமணம் நடைபெற்றதாக சொல்லப்பபடும்

கீழ்அரும்பூருக்கு எனது ஊரான வெளியங்கோட்டை கிராமத்தில் இருந்துசெல்ல எவ்வவு நேரம் ஆகும் என்றால் சுமார் 45 நிமிடம் ஆகும்.ஆஜர் எதிரிக்கு 2ம் திருமணம் நடைபெற்றதாக சொல்லப்படும் தேதயில் நான் கீழ்அரும்புரில் இருந்தேன் என்றால் சரியல்ல. நான் வெளியங்கோட்டையில் இருந்தேன். மேற்படி வெளியஙகோட்டையில் நான் இருந்த வீட்டில் தான் இவ்வழக்கின் பிற சாட்சிகளான PW 2, PW 3 இருந்தார்கள் என்றால் சரிதான். மேற்படி இரு நபர்களும் ஆஜர் எதிரிய்ன் தகப்பனார் போஸ்ஸிடம் பேசி கொள்வார்களா என்றால் பேசி கொள்வார்கள். மேற்படி இருநபர்களும் ஆஜர்எதிரியின் இரண்டாம் திருமணத்திற்கு அழைத்ததன் பேரில் சென்றார்களா என்றால் அந்தவிவரம்எனக்கு தெரியாது.

10. மேற்படி இருநபர்களும் அன்றையதினம் எத்தனை மணிக்கு வீட்டிலிருந்து கிளம்பினார்கள் என்றால் அந்த விவரம்எனக்கு தெரியாது. மேற்படி இருநபர்களுடன் நான் நல்லமுறையில் உறவு பாராட்டி வருகிறேன் என்றால் சரிதான். ஆஜர்எதிரிக்கு 2ம்திருமணம் நடக்கவிருக்கும் விவரம் PW 2,PW 3 ஆகியோருக்கு திருமணத்தின் முந்தைய தினம் தெரிந்திருநதால் என்னிடம் சொல்லியிருப்பார்கள் என்றால் சரிதான். மேற்படி இருநபர்களும் செல்போன் பயன்படுத்துகிறார்கள் என்றால் சரிதான். ஆஜர் எதிரியின் 2ம்திருமணத்தில் சுமார் 15 நபர்கள் கலந்துகொண்டாாக்ள் என்றால் ஆஜர் எதிரியின் பெற்றோர், அவர் திருமணம் செய்துகொண்ட நபரின் பெற்றோர் ஆகியோர் கலந்து கொண்டனர். பிற விவரங்கள் தெரியாது. அந்த திருமணத்தில் வீடியோ புகைப்படம் எடுக்கப்பட்டதா என்றால் அந்த விவரம் எனக்கு தெரியாது. விருந்து வைபோகம் நடைபெற்றதா என்றால் அந்தவிவரம எனக்கு தெரியாது. திருணமத்திற்கு பந்தல் போடப்பட்டதா என்றால் அந்த விவரம் எனக்கு தெரியாது.

11.ஆஜர்எதிரி பணிபுரியும் ராஜ்டிவியில் பணிபுரியும் காலத்தில் அவரை நீக்கம் செய்ய வேண்டும் என்று அந்த நிறுவனத்திற்கு நான் மனு அனுப்பினேன் என்றால் சரிதான். மேற்படி மனுவை நான் ஆஜர் எதிரியின் 2ம் திருமணத்திற்கு பின்புதான் அனுப்பினேன் என்றால் சரிதான். அந்தபுகார் மனுவில் ஆஜர் எதிரி பிரியதர்ஷினி என்னும் பெண்ணுடன் தகாத உறவு வைத்திருப்பதாக தெரிவித்துள்ளேன என்றால் சரிதான். அந்த மனுவில் ஆஜர் எதிரியும் பிரியதர்ஷினியும் 2ம்திருமணம் செய்து

கொண்டதை தெரிவிக்கவில்லை என்றால் சரிதான். ம.சா.ஆ.1 ஆவணத்தில் அது எந்த தேதியில் கொடுக்கப்பட்டது என்று குறிப்பிடவில்லை என்றால் சரிதான். மேற்படி ம.சா.ஆ.1 யை பொறுத்து எனக்கு மனு ரசீது வழங்கப்பட்டது என்றால் அந்த விவரம் நியாபகம் இல்லை. ம.சா.ஆ.1 மனுதொடர்பாக 15.10.2017 ஆண்டு காவல் நிலையத்தில் விசாரணை நடைபெற்றது என்றால் சரிதான். என்னிடம் தற்போது காட்டப்படும் புகாரானது நான் அனைத்து மகளிர் காவல் நிலையத்தில் 25.09.2017 ஆண்டு கொடுத்த புகார் என்றால் சரிதான். அது (மனுதாரர் தரப்பு கடுமையான ஆட்சேயபனையுடன்) எ.ம.சா.ஆ .1 ஆக குறியீடு செய்யப்படுகிறது. எ.ம.சா.ஆ.1 ஆவணத்தில் ஆஜர்எதிரிக்கு 2ம் திருமணம் நடைபெற்ற விவரத்தை குறிப்பிட்டுள்ளேனா என்றால் திருமணம் செய்து குடும்பம் நடத்தி வரும் விவரததை தெரிவித்துள்ளேன். 2ம்திருமணம் நடைபெற்ற தேதியை குறிப்பிடவில்லை என்றால் சரிதான்.

12. ம.சா.ஆ.1 ஆவணத்தை எந்த தேதியில் காவல்நிலையத்தில் கொடுத்தேன் என்றால் தேதி நியாபகம் இல்லை. ம.சா.ஆ,1 ஆவணத்தை தாக்கல் செய்த தேதியை வழக்கில் தெரிவித்துள்ளேனா என்றால் நியாபகம் இல்லை. எ.மா.சஆ.1 ஆவணத்தில் எதிரி எந்த தேதியில் 2ம் திருமணம் செய்துகொண்டார் என்று குறிப்பிடாததால் பின்னிட்டு யோசித்து ம.சா.ஆ.1 ஆவணத்தை காவல் நிலையத்தில் கொடுத்தேன் என்றால் சரியல்ல. நான் இந்த வழக்குதொடர்பான தனி புகாரை நீதிமன்றத்தில் தாக்கல் செய்தபோது ம.சா.ஆ.1 ஆவணத்தை தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான்.எ.ம.சா.ஆ 1 ஆவணத்தில் விசாரணையில் ஆஜர் எதிரி 2ம் திருமணம் செய்து கொண்டார் என்ற சந்தேகத்தின் அடிப்படையில் புகார் அளித்ததாக என்னிடம் தற்போது காட்டப்படும் விசாரணை வாக்குமூலத்தில் தெரிவித்துள்ளேன் என்றால் சரிதான். அந்தவிசாரணை வாக்கு மூலம (மனுதாரர் தரப்பு கடுமையான ஆட்சயபணையுடன்) .எ.ம.சா.ஆ 2 ஆக குறியீடு செய்யப்படுகிறது. அந்த விசாரணை வாக்குமூலத்தில் எனது மாமா தமிழ்செல்வனும் கையொப்பம் இட்டுள்ளார் என்றால் சரிதான்.

13. CRLMP 482/25 மூலம் ஏற்பட்ட உத்தரவின் மூலம் நீதிமன்றத்தில் தாக்கல்செய்யப்பட்ட ஆவணத்தில் ஆஜர் எதிரி இனி தம்பி மனைவியுடன் தொடர்பு

வைத்து கொள்ளமாட்டேன் என்றும் என்னையும் குழந்தைகளையும் நன்கு பார்த்துகொள்வேன் என்று உறுதி கூறியதன் பேரில் 08.10.2017 தேதி மனுவின் விசாரணை முடிக்கப்பட்டது என்றால் அந்தவிவரம் எனக்கு தெரியாது. இந்தவ ழக்கு தாக்கல் செய்வதற்கு முன்பு சென்னையில் உள்ள இளம்வழுதி என்னும் வழக்கறிர் எனக்கு அறிவிப்பு அனுப்பி அதற்கு எனது தரப்பில் வழககறிஞர் பதில அறிவிப்பு அனுப்பினார் என்றால சரிதான். அதன்பின் தான் நான் நீதிமன்றத்தில் வழக்கு தாக்கல்செய்தேன் என்றால் எனக்கு நினைவில் இல்லை. பதில அறிவிப்பில் ஆஜர் எதிரி பிரியதர்ஷினியுடன் தகாத உறவில் இருப்பதாகதான் குறிப்பிடப்பட்டுள்ளது திருமண விவரங்கள் குறிப்படவில்லை என்றால் சரிதான்.

14. 25.09.2017 தேதி நான் அனைத்து மகளிர் காவல்நிலையத்தில் கொடுதத புகார் நிலுவையில் இருந்த சமயத்தில் 19.10.2017 தேதி திருவாடானை பேருந்து நிலையம் அருகில் இவ்வழக்கின் எதிரிகள் என்னைஅசிங்கமாக பேசி தாக்கி காயப்படுத்தியதாக நா'ன் நீதிமன்றத்தில் புகார் கொடுத்து அதனடிப்படையில் நீதிமன்ற உத்தரவு படி திருவாடானை அனைத்து மகளிர் காவல்நிலையத்தில் குற்ற எண்.8/2017 கீழ் முதல்தகவல் அறிக்கை பதிவுசெய்யப்பட்டது என்றால் சரிதான். மேறப்டி நீதிமன்றத்தில கொடுத்த புகாரிலும் இவ்வழக்கின் சாடசிகள் PW 2, PW 3 உள்ளனர் என்றால் சரிதான். குற்ற எண். 8/2017 ல் நான் புகார் அளிக்கும்போது எனக்கு ஆஜர்எதிரிக்கு 2ம்திருமணம் நடைபெற்ற விவரம் தெரியும் என்றால் சரிதான். அந்த புகார் மனுவில் நான் ஆஜர் எதிாக்கு 2ம் திருமணம் நடைபெற்ற விவரங்களை தெரிவிக்கவில்லை என்றால் சரிதான்.மேற்படி குற்ற எண்.8/2017 பொய்புகார் என்று RCS 14/2018 என்று முடிக்கப்பட்டது என்றால் அந்தவிவரம் எனக்கு தெரியாது. மேற்படி RCS 14/2018 தொடர்பாக எனக்கு நீதிமன்ற அழைப்பாணை வந்ததா என்றால் வரவில்லை.

15. நான் சொன்னவாறு சொன்ன தேதியில் ஆஜர் எதிரி எந்த வித 2ம்திருமணமும் செய்யவில்லை என்றும் வழக்கின்பிற எதிரிகள் அந்த திருமணத்திற்கு எந்த விதத்திலும் உடந்தையாக இருக்கவில்லை என்றும் நான் இவவழக்கை எனது தாழ்வு மனப்பான்மையின் காரணமாக ஆஜர் எதிரி காழ்ப்புணர்ச்சி கொண்டு அவரது இறந்துபோன தம்பியின் மனைவி மீது பொய்யாக குற்றம் சாட்டியுள்ளேன் என்றால்

சரியல்ல. 2 ம்திருமணமானது உண்மையாக நடைபெறாததால் நான் முன்னுக்கு பின் முரணாக பல்வேறு ஆவணங்களில் தெரிவித்துள்ளேன் என்றால் சரியல்ல. இந்த வழக்கிற்கும் எதிரிகளுக்கும் தொடப்பில்லை என்றால் சரியல்ல.

Taken down by me/before me in
open court,interpreted/read over
to the witness and admitted by the
deponent to be correct.

Sd.-/J.Antony Rishandev,
Judicial Magistrate,
Thiruvadanai.